REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04) 4 PAGES பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 22 CLICK - 06
SEPTEMBER 2025 ₹. 1

### அறிவிப்பு

60 வயதுக்கு உட்பட்டவர்கள் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து குடும்ப பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு

**P. துரைபாபு**
CVPA செயலாளர்

## அக்டோபர் 2 : CVPA முப்பதாம் ஆண்டு தொடக்க விழா மற்றும் குடும்ப விழா

### வடசென்னை, தண்டையார்பேட்டை கேப்டன் மஹாலில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்படுகிறது.!

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!!

நமது சங்கத்தின் நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் 08.09.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு ஆலோசனைகள் கருத்து பரிமாற்றங்கள் நடைபெற்றன. குறிப்பாக நமது சங்கத்தின் 30 ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் குடும்ப விழாவை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அனைத்து நிர்வாக குழு மற்றும் செயற்குழு ஒப்புதலுடன் வட சென்னையில் குடும்ப விழா நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.இந்த விழாவை சிறப்பாக நடத்தி முடிக்க பல்வேறு திருமண மண்டபங்கள் பரிசீலிக்கப்பட்டன. இறுதியாக வட சென்னை, தண்டையார்பேட்டை பகுதியில் உள்ள கேப்டன் மஹாலில் குடும்ப விழா நிகழ்ச்சியை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. இவ்விழாவிற்கு செலவு செய்வதற்கு தேவையான பணத்தை நன்கொடையாளர்கள் மூலமாகவும், பண பற்றாக்குறை ஏற்பட்டால் சங்க பணத்தில் இருந்து எடுத்து செலவு செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வடசென்னை பகுதி செயலாளர்கள், மத்திய சென்னை பகுதி செயலாளர்கள், தென் சென்னை எஸ்1 மற்றும் எஸ்2 பகுதி செயலாளர்கள், அந்தந்த பகுதியின் துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் ஆகியோருடன் ஒன்றிணைந்து சங்கத்தின் ஆண்டு விழாவையும், குடும்ப விழாவையும் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்து வருகின்றனர். நமது சங்கத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்கிற நல்ல எண்ணம் கொண்ட அன்பு உள்ளங்கள் தாராளமாக நன்கொடை வழங்கி வருகின்றனர்.

விழாவை ஏற்பாடு செய்ய குறைந்த நாட்களே இருப்பதால் விழாவிற்கான அழைப்பிதழ் வாட்ஸ்அப் மூலமாகவே சங்க உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருகின்றது. குடும்ப விழாவில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்தோடு வந்து கலந்து கொண்டு குடும்ப விழாவை சிறப்பிக்க வேண்டும் என்று சங்க நிர்வாகம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்விழாவில் சின்னத்திரை மற்றும் சினிமா துறை பிரபலங்கள் பங்கேற்க, அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

அப்போலோ மருத்துவமனை நடத்தும் ரத்ததான முகாம், சைட் கேர் நடத்தும் கண் பரிசோதனை முகாம் ஆகியவற்றுடன் மருத்துவ முகாமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10 மற்றும் 12-ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் நமது குடும்ப விழாவில் பாராட்டி கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களுக்கான நினைவுப் பரிசு வழங்கப்பட உள்ளது. மதிப்பெண் அடிப்படையில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு சிறப்பு பரிசு, வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே 10 மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த உங்கள் பிள்ளைகளின் மார்க் ஷீட்டை சங்க அலுவலகத்தில் அல்லது உங்கள் பகுதியைச் சேர்ந்த சங்க நிர்வாகிகளிடம் உடனடியாக வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நமது குழந்தைகள் கலந்து கொள்ளும் கலை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்கள் அவர்களுக்கான ஆடியோவை கையோடு எடுத்து வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. உங்களின் அனைவரின் ஒத்துழைப்போடு நிகழ்ச்சி சிறப்பாக அமைய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம். சங்க நிர்வாகிகள் எடுக்கும் முயற்சிக்கு, உங்கள் அனைவரின் நல் ஆதரவை தந்து ஒத்துழைக்கும் படி அன்போடு வேண்டி காத்திருக்கிறோம்.

இப்படிக்கு : CVPA நிர்வாகம்




**குறிப்பு : நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் மாநிலம் மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற போட்டியில் பங்கு பெற்று வெற்றி பெற்று பரிசு பெற்றவர்கள் தங்களுடைய பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**



### CVPA குடும்ப விழாவிற்கு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.சங்கர் அவர்கள் 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார்

சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் 30-ம் ஆண்டு துவக்க விழா மற்றும் குடும்ப விழா வரும் அக்டோபர் இரண்டாம் தேதி சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள கேப்டன் மஹாலில் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவ்விழாவில் கலந்து கொள்ள பல்வேறு முக்கிய பிரமுகர்களை சந்தித்து அழைப்பு விடுத்து வருகிறனர். நமது சங்க தலைவர் திரு.புருஷோத்தமன், செயலாளர் திரு.துரைபாபு ஆகியோர் தலைமையில், வடசென்னை துணைத் தலைவர், இணைச் செயலாளர், மற்றும் சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர்களுடன் இணைந்து வட சென்னை பகுதியை சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்களும் அழைப்பு விடுக்கும் பணியை சிறப்பாக செய்து வருகின்றார்கள். குறிப்பாக திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் அவர்களை சந்தித்து குடும்ப விழாவுக்கு அழைப்பு விடுத்தனர். அவர் நமது குடும்ப விழாவிற்காக 50 ஆயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கி, நமது குடும்ப விழாவிற்கு தனது ஆதரவை தெரிவித்தார். அவருக்கு நமது சங்கம் சார்பாக நிர்வாகிகள் அனைவரும் நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.









CVPA குடும்ப விழாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்ட திரைத்துறை பிரபலங்கள்





CVPA குடும்ப விழாவில் சாப்பாட்டுக்கு ஆகும் செலவுகளின் ஒரு பகுதியை தினா கலர் லேப் நிறுவனம் தனது பங்களிப்பாக வழங்கும் என திரு.தினகர் அவர்கள் அறிவித்துள்ளார். அவருக்கு நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



இந்த வருடம் நமது கலைஞர்களுக்கான குடும்ப விழா கேப்டன் மஹாலில் நடைபெறுகிறது. நமது சங்கத்திற்காக கேப்டன் மஹால் உரிமையாளர் மண்டபத்தை மிக குறைந்த வாடகைக்கு கொடுத்திருக்கிறார். நமது சங்க நிர்வாகிகள் மற்றும் வடசென்னை பகுதி செயலாளர்கள் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் அவரை நேரில் சந்தித்து நன்றி கூறினார்கள்.



வடசென்னை கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த நமது சங்கத்தின் மூத்த உறுப்பினரும், ஆயுட்கால உறுப்பினருமான 3 சேனல் திரு.ஜெம்மி அவர்கள் குடும்ப விழாவிற்கான சாப்பாட்டு செலவிற்காக 60000 ரூபாயை சங்க நிர்வாகிகளிடம் வழங்கினார். சங்க நிர்வாகிகள் அவருக்கு நன்றி தெரிவித்தனர்.

### சோனி ஒர்க் ஷாப்

சோனி நிறுவனம் கடந்த மாதம் Z 200 மற்றும் NX 800 எனும் இரண்டு புதிய மாடல் கேமராக்களை அறிமுகம் செய்துள்ளது. இந்த கேமராக்களின் செயலாக்கம் குறித்து வீடியோகிராபர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், சென்னை, வடபழனியில் உள்ள சோனி தலைமை அலுவலகத்தில் Z 200 & NX 800 டெமோ நிகழ்ச்சிக்கு இம்மாதம் 16 ,17 ஆகிய இரண்டு தினங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.இந்த டெமோ நிகழ்ச்சியை நமது சங்க தலைவர் புருஷோத்தமன் மற்றும் சங்க செயலாளர்கள் துரைபாபு ஆகிய இருவரும் தொடங்கி வைத்தார்கள். சோனி நிறுவனம் சார்பாக கிஷோர் அவர்களும் ஜெகன் அவர்களும் இதற்கான ஏற்பாடுகளை முன்னிருந்து சிறப்பாக செய்து கொடுத்தனர். சோனி கேமராக்களின் ஒளிப்பட பயிற்றுனர் முஸ்தபா அவர்கள் Z 200 மற்றும் NX 800 ஆகிய இரண்டு கேமராக்களின் செயல்பாடுகள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். தென் சென்னை எஸ்1 துணைத் தலைவர் இணைச்செயலாளர் மற்றும் பகுதி செயலாளர்கள் ஒருங்கிணைப்புடன் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று முடிந்தது.



16.09.2025 அன்று தென் சென்னை எஸ் -1 சார்பாக கலந்து கொண்ட சங்க உறுப்பினர்கள்




17.09.2025 அன்று தென் சென்னை சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்




வடசென்னை, வண்ணாரப்பேட்டை, பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.K. ராஜா-திருமதி.ஸ்டெல்லா தம்பதியினரின் மகள் சந்தியா-விக்னேஷ் குமார் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக நிர்வாகக் குழு, செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



தென் சென்னை எஸ்-2 மடிப்பாக்கம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் வீனஸ் ஸ்டுடியோ திரு. கலையரசன் அவர்களின் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, புளியந்தோப்பு பகுதியை சேர்ந்த, நமது சங்க உறுப்பினர் CIRCLE MEMORIES STUDIO திரு.சதீஷ்குமார்- வைஷ்ணவி இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நிர்வாககுழு, செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.




CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம். 2025 செப்டம்பர் மாத ரினிவல் முடிவடைந்த உறுப்பினர்கள் தங்களது அடையாள அட்டையை ID CARD புதுப்பித்துக் கொள்ள மேலே உள்ள QR CODE பயன்படுத்தி ₹1000/- செலுத்தலாம். அல்லது உங்கள் பகுதி செயலாளர் மூலம் தொடர்பு கொண்டு அவர் வாயிலாகவும் புதுப்பித்துக் கொள்ளலாம். QR CODE மூலமாக பணம் செலுத்துபவர்கள் UPI Transaction NumberI Screen Short எடுத்து தங்களின் உறுப்பினர் அடையாள எண் மற்றும் பெயரை பதிவு செய்து சங்க அலுவலக Whatsapp மொபைல் 7824034734 எண்ணிற்கு அனுப்பவும்.

## நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு (CVPA NNT) திட்டம்

சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்!

நமது சங்கத்தில் உருவாக்கப்பட்டுள்ள நமக்கு நாமே திட்டம் நமக்கானது என்பதை விட, நமது சக கலைஞனின் குடும்ப பாதுகாப்பிற்கானது என்கிற எண்ணம் நம் எல்லோருக்கும் முதலில் ஏற்பட வேண்டும்.இதுவே நம் தொழில் கலைஞர்களின் ஒற்றுமையை உலகறிய செய்யும். இதனை கருத்தில் கொண்டுதான், கருணை உள்ளத்தோடு உதவி செய்யும் நோக்கம் கொண்ட ஆயிரம் சங்க உறுப்பினர்களை இத்திட்டத்தில் இணைக்கும் முயற்சியை கடந்த சில மாதங்களாக நமது சங்கம் முன்னெடுத்து செய்து வருகிறது.இவர்கள் மூலமாக கிடைக்கும் உதவியானது நமது சக கலைஞனின் குடும்ப பாதுகாப்பிற்கு எவ்வித காப்பீடும் இன்றி ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கிடைப்பதை உறுதி செய்துள்ளது.இத்திட்டம் தொடங்கி ஒரு ஆண்டு முடிவடைவதற்கு முன்பாகவே, நமக்கு நாமே திட்டத்தின் மூலம் மூன்று குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பேருதவியாய் இருந்திருக்கிறோம். எனவே, நமது சங்கத்தை சேர்ந்த போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பங்களை நமது சங்கத்தின் பாதுகாப்பு வளையத்திற்குள் ஒன்றிணைத்து கொண்டு வருவோம். நமக்கு நாமே திட்டத்தில் நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும், உறுப்பினராக இணைவோம்.

இப்படிக்கு :

**புருஷோத்தமன்** — CVPA தலைவர்

**துரைபாபு** — CVPA செயலாளர்

Regd No. : 446/96

**சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்**

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி
## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்
## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ருபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351